**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், தை மாதம் 22 ம் நாள்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண்.15/2025**

**in**

**அசல் வழக்கு எண். 140/2019**

1. J. புவனேஷ்வரி
2. J. காயத்ரி
3. J. சௌந்தர்யா
4. சம்பாத்தாள்
5. ஜோதி @ ஜோதிமணி ... **மனுதாரர்கள்/ 1 முதல் 4, 8 பிரதிவாதிகள்**

**// எதிர்//**

1. சரோஜினி
2. ஜெயபிரகாஷ் ... **எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 2 வாதிகள்**
3. மாவட்ட ஆட்சியர்
4. வட்டாட்சியர் ... **எதிர்மனுதாரர்கள்/6 மற்றும் 7 பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஆறுமுகம், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.ராமர், அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.S.மகேந்திரன், அவர்கள் ஆஜராகியும், இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 7 விதி 11 ன் கீழ் அசல் வழக்கு எண்.140/2019 முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என நீக்கறவு செய்யக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

1.1). காலஞ்சென்ற கே. ஜெகநாதனின் ஒரே சட்டப்பூர்வ வாரிசுகள் வாதிகள்தான் என அறிவிக்கக் கோரி, இந்நீதிமன்றத்தில் 24.07.2015 அன்று ஒரு முந்தைய வழக்கு (அசல் வழக்கு எண் 166/2018) தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு, 24.04.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மூலம், ஒரு மாத காலத்திற்குள் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்து, வாபஸ் பெறப்பட்டதாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மனுதாரர்கள் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. 25.10.2019 அன்று தாக்கல் செய்யப்பட்ட தற்போதைய வழக்கு (அசல் வழக்கு எண்.140/2019), அந்தத் தீர்ப்பையும் மீறித் தொடரப்பட்டது, இது முந்தைய தள்ளுபடி குறித்த தகவலை மறைத்ததைக் காட்டுகிறது. முந்தைய வழக்கில் (அசல் வழக்கு எண்.166/2018) தவறு அல்லது நிவர்த்தி செய்யமுடியாத குறை இருந்திருக்கலாம். தற்போதைய வழக்கு (அசல் வழக்கு எண்.140/2019) 1908 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 11 இன் கீழ் முன் தீர்ப்புத் தடையால் தடைசெய்யப்பட்டுள்ளது.

1.2). தீர்ப்பாணையில் உள்ள கால வரம்பிற்கு பாதகமின்றி தற்போதைய வழக்கின் வாதுரையில் (அசல் வழக்கு எண்.140/2019) வாதிகளின் கோரிக்கையை உறுதிப்படுத்த தேவையான வாதுரை இல்லை. 1ம் வாதியான சரோஜினி, மறைந்த கே. ஜெகநாதனை சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொண்ட முதல் மனைவி என்பது குறித்தும், திருமண தேதி குறித்தும் செலல்லப்படவில்லை. இளைய மனைவியாகக் கூறப்படும் 8ம் பிரதிவாதியுடன் மறைந்த கே. ஜெகநாதனுடனான

திருமண ஆண்டு வழக்கில் குறிப்பிடப்படவில்லை, இது வாதிகளின் வாரிசுரிமைக் கோரிக்கையின் சட்டப்பூர்வத்தன்மையைத் தீர்மானிப்பதில் முக்கியமானது. வழக்கு எந்த புதிய வழக்கு மூலத்தையும் வெளிப்படுத்தவில்லை. மேலும் மேற்படி வழக்கின் தொடர்ச்சியை ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). 1மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

2.1). மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். 1ம் வாதி காலஞ்சென்ற ஜெகநாதனின் சட்டபூர்வமான மனைவி என்பதையும், 2 ம் வாதி ஜெகநாதன் என்பவருக்கு பிறந்த முதல் மகன் என்பதையும், நன்கு அறிந்த பிரதிவாதிகள் வழக்கில் எதிர்வாதம் தாக்கல் செய்தபோது எந்த வித ஆட்சேபனையும் தெரிவித்து தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வாதிகள் இருவரும் காலஞ்சென்ற ஜெகநாதன் வாரிசுகள் என்பதற்கு வாதிகள் தரப்பில் பல ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வாதிகள் தரப்பில் அளித்துள்ள சாட்சிகளும் காலஞ்சென்ற சட்டப்பூர்வமான மனைவி 1ம் வாதி மட்டுமே வாதிகள் தரப்பில் தெளிவாக நிருபிக்கப்பட்டுள்ளது.

2.2). இவ்வாறான சூழ்நிலைகளில் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரிப்பதற்காக நீதிமன்றம் வாய்ப்பளித்த நிலையில் 1-ம் பிரதிவாதி காலஞ்சென்ற ஜெகநாதன் என்பவருடைய முதல் மனைவி என பொய்யான சங்கதிகளை கூறி ஒரு இடைக்கால மனுவினை தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுடைய தாயாரான ஜோதி என்கிற ஜோதிமணி என்பவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டுமென கோரியதை நீதிமன்றம்

அனுமதித்து வழக்கு விசாரணை மேற்கொண்டது.

2.3). இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் எந்த வித ஆவணமுமின்றி வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் வாதிகள் இந்த அசல் வழக்கினுடைய தீர்ப்பாணையை உடனே பெற்று விடக்கூடாது என்ற எண்ணத்திலும் பிரதிவாதி வழக்கு விசாரணை முற்றிலுமாக வாதி தரப்பில் முடிவு பெற்றுள்ள நிலையில் மிகவும் கால தாமதத்துடனும், உள்நோக்கத்துடனும் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.4). மேலும் வாதிகள் தரப்பில் வாரிசு சான்றிதழ் கேட்டு அசல் வழக்கு எண்.166/2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கில் சில இடர்பாடுகள் ஏற்பட்டதால் அதனை வாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த இடைக்கால மனுவில் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையிலும் மீண்டும் இந்த அசல் தாவாவினை இந்த வாதிகள் கடந்த 2019 ம் வருடம் தாக்கல் செய்துள்ளார்கள். தற்போது வழக்கு விசாரணை கடந்த 6 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த போது இந்த பிரதிவாதிகள் தரப்பில் 8 ம் பிரதிவாதி ஒரு தரப்பினராக சேர்ப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்காமல், தற்போது எந்தவித சட்டபடியான ஆதாரங்கள் இல்லாமலும், ஏற்கனவே தாக்கல் செய்த தாவாவானது காலதாமதத்தாலும், ஒரே சம்பவத்திற்கு இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் வழக்கு மூலம் எழவில்லை என கூறி 8 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. இந்த மனுவினை அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். செய்யக்கூடியதாகும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>தீர்வு :-</u>**

5.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, இரு தரப்பு வாதுரை கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. மனுதாரர்கள் தரப்பில், தற்போதைய வழக்கு (அசல் வழக்கு எண்.140/2019) 1908 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 11 இன் கீழ் முன் தீர்ப்புத் தடையால் தடைசெய்யப்பட்டுள்ளது. காலஞ்சென்ற கே. ஜெகநாதனின் ஒரே சட்டப்பூர்வ வாரிசுகள் வாதிகள்தான் என அறிவிக்கக் கோரி, இந்நீதிமன்றத்தில் 24.07.2015 அன்று ஒரு முந்தைய வழக்கு (அசல் வழக்கு எண் 166/2018) தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு, 24.04.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மூலம், ஒரு மாத காலத்திற்குள் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்து, வாபஸ் பெறப்பட்டதாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மனுதாரர்கள் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. வழக்கு எந்த புதிய வழக்கு மூலத்தையும் வெளிப்படுத்தவில்லை. மேலும் மேற்படி வழக்கின் தொடர்ச்சியை ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என சொல்லப்பட்டுள்ளது.

5.2). 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில், தற்போது வழக்கு விசாரணை கடந்த 6 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த போது இந்த பிரதிவாதிகள் தரப்பில் 8 ம் பிரதிவாதி ஒரு தரப்பினராக சேர்ப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்காமல், தற்போது எந்தவித சட்டபடியான ஆதாரங்கள் இல்லாமலும், ஏற்கனவே தாக்கல் செய்த தாவாவானது காலதாமதத்தாலும், ஒரே சம்பவத்திற்கு இரண்டு வழக்குகள்

தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் வழக்கு மூலம் எழவில்லை என கூறி 8ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.3). மேற்படி பரிசீலனைகளில் இருந்து, அசல் வழக்கானது வாதிகள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் இறந்து போன K.ஜெகநாதனின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்று விளபுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்கான நிலுவையில் உள்ள நிலையில், 1 முதல் 5 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்பவுடையதல்ல. மேலும் அசல் வழக்கானது முன் தீர்ப்புத் தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ள நிலையில் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து ஆவணம் மூலமாக நிரூபிக்கவில்லை. மனுதாரர் தரப்பில் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்ட்டுள்ளது என ஆவணங்கள் மூலம் நிரூபிக்காததால், இந்த மனு நீதியின் நலன் கருதி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக, மனு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Draft/ Fair Order
I.A.No.15/2025
O.S.No.140/2019
Dated: 05.02.2026
DMC, Sulur